# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2024

## தமிழ்

8 – ஆம் வகுப்பு

நேரம் : 2.30 மணி

K. SIVANANDHA, M.A.B.Ed.,
BT. ASST [SOCIAL SCIENCE].
GOVT. HIGH . SCHOOL,
SANDANAPALLI
KELAMANGALAM (BLOCK)
KRISHNAGIRI (DT).

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ......................... .
   அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு
2. அயோத்திதாசர் நடத்திய இதழ் ....................... .
   அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
   இ) அரைப் பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்
3. வறுமை வந்த காலத்தில் .................. குறையாமல் வாழ வேண்டும்.
   அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
4. பானை ................. ஒரு சிறந்த கலையாகும்.
   அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்
5. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ....................... .
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித் தொகை
6. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித்தந்த திட்டம் ................ .
   அ) மதிய உணவுத் திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம்
   இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்
7. குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................
   அ) குணங்கள் எல்லாம் ஆ) குணங்களில்லாம் இ) குணமெல்லாம் ஈ) குணங்களெல்லாம்
8. "வெங்கரி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................
   அ) வெம்+கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி
9. உன்னுடன் நீயே .......................... கொள்.
   அ) சேர்த்து ஆ) பகை இ) கைகுலுக்கிக் ஈ) நட்பு
10. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ................ . அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

11. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் ................. .
12. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ......................... .
13. எழுத்துக்களில் புள்ளிகளில் ஏற்படும் குழப்பங்களை களைந்தவர் ......................... .
14. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ......................... மதிக்கின்றனர்.
15. புற உலக ஆராய்ச்சிக்கு ......................... கொழு கொம்பு போன்றது.

**III பொருத்துக.** 4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 16. | இயற்கை ஓவியம் | – கெடுதல் விகாரம் 17 |
| 17. | மரவேர் | – பத்துப்பாட்டு 16 |
| 18. | வெண்பா | – மேன்மை 19 |
| 19. | நிறை | – செப்பலோசை 18 |

**IV அடிமாறாமல் எழுதுக.** 3 + 2 = 5

20. கற்றோர்க்குக் ............. எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடல். ***(அல்லது)***
    ஓடி வந்து கைகுலுக்க ................ எனத்தொடங்கும் பாடல்.
21. நவில் தோறும் ................ எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 X 2 = 10

22. செய்யுளின் மரபை ஏன் மாற்றக்கூடாது?
23. அம்பேத்கர் தம் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
24. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
25. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
26. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
27. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
28. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
29. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?



www.freetnbooks.com | FREETNBOOKS
Kindly Send Me Your Key Answers to Our email id -

www.freetnbooks.com

**VI எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4 X 2 = 8


30. வினைமுற்று என்றால் என்ன?
31. இயல்பு புணர்ச்சி - எடுத்துக்காட்டுடன் விளக்குக.
32. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
33. **சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.**
    அ) கோழி ............ *(கூவும் / கொக்கரிக்கும்).* ஆ) சோறு ............... *(தின் / உண்).*
34. **தமிழ் எண்களை எழுதுக.** அ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் - 6.
    ஆ) உலக இயற்கை நீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் - 5.
35. **கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**
    அ) சிறுமி .................... *(தன்து / தமது)* கையில் மலர்களை வைத்திருந்தாள்.
    ஆ) குழந்தைகள் ....... *(தன்னால் / தம்மால்)* இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**VII எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 3 X 3 = 9

36. பள்ளி குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரை யாது?
37. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
38. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
39. பூமி எப்போது பாதையாகும்?
40. அரசியல் விடுதலைப் பற்றி அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?
41. வேற்றுமை அணி என்றால் என்ன?

**VIII விடையளி.** 5 X 5 = 25

42. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லுந்துவனர் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)*** ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
43. புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. ***(அல்லது)***
    இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.
44. **கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருப்புகளை இட்டு நிரப்புக.**
    ***(கொண்டு, இருந்து உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)***
    அ) இடி ............ மழை வந்தது. ஆ) மலர்விழி தேர்வில் ..................... ஆயத்தமானாள்.
    இ) அருவி மலையில் .................... வீழ்ந்தது.
    ஈ) தமிழைக் .................... சுவையான மொழியுண்டோ?
    உ) யாழ், தமிழர் .................... இசைக்கருவிகளுள் ஒன்று.
45. **கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.**
    1) தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
    2) தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
    3) ஔவைக்கு தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
    4) அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
    5) தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
    6) தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.
46. **கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.**



**IX அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 8 = 24

47. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***
    காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
48. திருக்குறளின் கருத்தை பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக. ***(அல்லது)***
    பால்மனம் - குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.
49. உழைப்பே உயர்வு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. ***(அல்லது)***
    நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS
**Kindly Send Me Your Key Answers to Our email id -**